| | | |
|---|---|---|
| **O.S No.** | : | **75/2023** |
| **DATE** | : | **04.08.2025** |
| **NAME** | : | **விஜய்** |
| தந்தை பெயர் | : | **சக்திவேல்** |

**பிரதிவாதி தரப்பில் வா.சா.2 குறுக்கு விசாரணை**

1. சின்ன தாத்தா வகையில் வாதி சீனுவாசன் எனக்கு உறவினர் ஆவார். வாதி எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எங்கள் கடை முன் பிரதிவாதி வண்டியை நிறுத்தி வாடிக்கையாளர்களுக்கு தொந்தரவு செய்வதால் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதியின் வீடு வாதி சொத்திற்கு பின் புறத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். எங்கள் கடையின் முன் பகுதி வழியாக தான் பிரதிவாதி தனது வீட்டிற்கு செல்ல முடியும் என்றால் வலது புறத்தில் செல்வதற்கான வழி உள்ளது. வாதி சொத்தின் முன்புறம் தான் பிரதிவாதியின் சொத்திற்கான முன்புறமும் ஆகும் என்றால் சரியல்ல.

2. பொது வழி நாராசமானது 3 அடி அகலம் கொண்டது. பிரதிவாதியின் வீட்டிற்கு செல்லும் நாராசத்திற்கு முன்பு தான் அவரது வண்டியை நிறுத்த முடியும் என்று சொன்னால் சரிதான். வாதி கிரையம் வாங்கிய இடத்தில் முழுமையாக கட்டிடம் கட்டியுள்ளார் என்றால் சரிதான். வாதியின் இடத்திற்கு முன்புள்ள இடம் அரசிற்கு சொந்தமானது என்று சொன்னால் சரிதான். எங்கள் கடைக்கு வரும் வாடிக்கையாளர்கள் பொது நாராசத்தின் முன்பு வாகனத்தை நிறுத்திவிட்டால் பிரதிவாதி தனது வீட்டிற்கு செல்ல இயலாது என்று சொன்னால் சரிதான். அவ்வாறு நடக்கும் காலங்களில் இரு தரப்பினருக்கும் இடையே சிறு வாக்குவாதங்கள் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான் . எங்கள் கடையில் நான் மற்றும் இரண்டு நபர்கள் வேலை செய்கிறோம். மொத்தமா எங்களது கடையில் நான்கு நபர்கள் எங்களது உரிமையாளருடன் சேர்த்து

என்றால் சரிதான். நாங்கள் நால்வரும் எங்களது வாகனங்களை கடையின் முன்புறம் நிறுத்துவோம் என்றால் சரிதான்.

3. வாதி வாகனங்கள் நிறுத்தி வைப்பது சம்மந்தமாக தாக்கல் செய்துள்ள புகைப்படங்களை எனக்கு தெரியும். அந்த புகைப்படங்களில் உள்ள வாகனங்கள் எங்களது மற்றும் எங்களது கடைக்கு வரும் வாடிக்கையாளர்களின் வாகனங்கள் என்றால் எங்களது வாகனங்கள் 3 தான் நிற்கும் கடைக்கு வரும் வாடிக்கையாளர்கள் வந்து சென்றுவிடுவார்கள். கடைக்கு முன்பு சுமார் 15 அடி இடம் உள்ளது. வாதி கோருவது போல முன்புறத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் வாகனங்கள் எங்களது ஊழியர்கள் மற்றும் எங்களது வாடிக்கையாளரின் வாகனங்கள் தான் என்றால் சரியல்ல, பிரதிவாதியின் வாகனங்களும் அங்கு நிறுத்தப்பட்டுள்ளது. பிரதிவாதியின் வீட்டிற்கு உள்ள வாகனங்களை அந்த முன்புறத்தில் தான் நிறுத்த முடியும் வேறு இடம் கிடையாது என்று சொன்னால் சரியல்ல, அவர்கள் எப்போதுமே அங்கு வாகனங்கள் நிறுத்தி உள்ளார்கள்.

4. தாவா சொத்தின் முன்புறம் உள்ள இடம் நகராட்சிக்கு சொந்தமானது அது சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்ய வாதிக்கு எந்த உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. வாதி எனது உறவினர் என்பதால் வாதிக்கு ஆதரவாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது

(S/d.Fanny Rajan)
Principal District Munsif,
Kancheepuram.